**முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், குளித்தலை**
**முன்னிலை:– திருமதி.R.தமிழரசி, B.A.,B.L.,**
**முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி, குளித்தலை,**
**2026 ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 26 ஆம் நாள் வியாழக்கிழமை**
**அசல் வழக்கு எண். 25/2026**
**CNR NO.TNKR090002112025**

1. ராமசாமி
2. தர்மராஜ்
3. வெள்ளையம்மாள்
4. ரோஜா ... வாதிகள்

**/எதிராக/**

1. ஆதாம் அலி
2. கைருன்னிசா பீவி
3. ஷேக் இஸ்மாயில்
4. ஷேக் ஹைதர் அலி .... பிரதிவாதிகள்

இவ்வழக்கு என் முன்பாக 18.03.2026 ஆம் தேதியன்று இறுதியாக விசாரணைக்கு வந்த போது வாதிகள் தரப்பில் வழக்கறிஞர் திரு.S.பாஸ்கர் அவர்கள் முன்னிலையாகியும், பிரதிவாதிகளை நீதிமன்றத்தில் அழைத்தும் ஆஜரின்மையால் தோன்றாதரப்பினர்களாக்கப்பட்டும், வாதி தரப்பு சாட்சியம் மற்றும் சான்றாவணங்களை ஆராய்ந்தும், வாதி தரப்பு வாதுரையை கேட்டறிந்த பின்பு இதுநாள் வரை இந்நீதிமன்ற பரிசீலனையில் இருந்தும் இன்று இந்நீதிமன்றம் வழங்கும்.

**தீர்ப்புரை**

இவ்வழக்கானது வாதிகளால் குளித்தலை மாவட்ட உரிமையியல் நீதிமன்ற நிறைவேற்று மனு எண்.119/1989 ல் தாவா சொத்தின் மீது 01.08.1989 ல் தரகம்பட்டி சார்பதிவாளர் அலுவலக பதிவேட்டில் பதிவு செய்துள்ள பதிவு எண்.01/1989 காலாவதியாகி விட்டது என விளம்புகை பரிகாரம் கோரி தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**வாதிகள் தரப்பு வழக்குரையின் சுருக்கம்**

1) 1 முதல் 4 வாதிகள் ஒரே குடும்பத்தை சேர்ந்தவர்கள் என்றும் தாவா சொத்து ஆதியில் வீரமலை என்பவருக்கு பாத்தியப்பட்டு வீரமலை

இறந்த பின்னிட்டு 1, 2 வாதிகளும், சங்கப்பிள்ளை என்பவரும் அவரது வாரிசுகள் என்றும் சங்கப்பிள்ளை இறந்த பின்னிட்டு 3, 4 வாதிகள் அவரது வாரிசுகள். தாவா சொத்து நாளது தேதி வரை வாதிகளின் அனுபவத்தில் இருந்து வருகிறது. வாதிகள் தாவா சொத்தின் மீது வங்கி கடன் பெறுவதற்காக பாகப்பிரிவினை செய்ய முயற்சித்த போது தாவா சொத்தில் உள்ள வில்லங்கம் குறித்து தெரிய வந்தது என்றும் மேற்படி வில்லங்கத்தை பார்த்த போது தான் 1,2 வாதிகளின் தகப்பனார் வீரமலைக்கு எதிராக அ.வ.எண்.447/1987 ல் வழக்கு தாக்கல் செய்து நிறைவேற்று மனு எண்.119/1989 ல் தாவா சொத்துக்கள் பற்றுகை செய்யப்பட்டுள்ள விபரம் தெரிய வந்தது என்றும் வழக்கறிஞர் மூலமாக மேற்படி சொத்தை பார்த்த போது அ.வ.எண்.447/1987 வழக்கில் ஏற்பட்ட செலவுத்தொகையாக ரூ.166 க்காக நிறைவேற்று மனு எண்.119/1989 வழக்கு தாக்கல் செய்து அதில் பற்றுகை உத்தரவு ஏற்பட்டுள்ள விபரம் தெரிய வந்தது.

2) மேற்படி வழக்கில் வாதிகள் தரப்பினர்கள் அல்ல. மேற்படி பற்றுகை உத்தரவு ஏற்பட்ட பின்னிட்டு அதை நிறைவேற்ற மனுவில் கண்ட எதிர்மனுதாரர்கள் எவ்வித நடவடிக்கையும் தற்போது வரை எடுக்கவில்லை. எனவே அவ்வழக்கில் வாதிகளாக இருந்த இந்த வழக்கின் பிரதிவாதிகளுக்கு எதிராக விளம்புகை பரிகாரம் கோரி இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளனர்.

3) இவ்வழக்கில் பிரதிவாதிகள் நீதிமன்ற அழைப்பாணையை பெற்றுக்கொண்ட பின்னிட்டு நீதிமன்றத்தில் ஆஜராகாமல் தோன்றாதரப்பினராக்கப்பட்டுள்ளார்கள்.

4) வாதிகள் தரப்பில், 1ம் வாதி ராமசாமி என்பவர் வா.சா.1 ஆக விசாரணை செய்யப்பட்டு, அவர் மூலம் வா.சா.ஆ.1 முதல் வா.சா.ஆ 8 வரையிலான சான்றாவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளது. பிரதிவாதிகள் தரப்பில் சாட்சியமோ, சான்றாவணங்களோ முன்னிடப்படவில்லை.

5) எனவே இவ்வழக்கில் தீர்க்கப்பட வேண்டிய பிரச்சனையானது இவ்வழக்கு அனுமதிக்கத்தக்கதா இல்லையா என்பதே ஆகும்.

**<u>தீர்வு</u>**

6) வாதிகள் தரப்பு வாதம் கேட்கப்பட்டது. வாதிகள் தரப்பில் தாவா சொத்தின் மீதுள்ள 1989ம் வருடம் ஏற்பட்டுள்ள பற்றுகை உத்தரவு காலாவதியாகி விட்டது என்றும் எனவே மேற்படி பற்றுகை உத்தரவை சார்பதிவாளர் அலுவலக பதிவேட்டில் இருந்து நீக்கம் செய்ய வேண்டுமென கோரி இவ்வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளதாக வாதிடப்பட்டுள்ளது. மேற்படி வாதத்திற்கு ஆதரவாக வா.சா.1 விசாரிக்கப்பட்டு வா.சா.ஆ.1 முதல் வா.சா.ஆ.8 வரையிலான ஆவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளது.

7) வா.சா.ஆ.1 மற்றும் வா.சா.ஆ.2–வீரமலை இறப்பு சான்றிதழ் மற்றும் வாரிசு சான்றிதழ். வா.சா.ஆ.3 மற்றும் வா.சா.ஆ.4–வீரமலையின் மகன் சங்கப்பிள்ளையின் இறப்பு மற்றும் வாரிசு சான்றிதழ். மேற்படி ஆவணங்களை பரிசீலனை செய்கையில், வீரமலை என்பவருக்கு 1, 2 வாதிகள் மற்றும் சங்கப்பிள்ளை என்பவரும் வாரிசுகள் என்பதை அறிய முடிகிறது. மேற்படி சங்கப்பிள்ளை இறந்த பின்னிட்டு அவரது வாரிசுகளான 3, 4 வாதிகள் இவ்வழக்கில் சேர்க்கப்பட்டுள்ள விபரம் உண்மை என்பதை அறிய முடிகிறது.

8) வா.சா.ஆ.5 மற்றும் வா.சா.ஆ.6–அ.வ.எண்.447/1987 வழக்கின் வாதுரை மற்றும் தீர்ப்புரை. மேற்படி ஆவணங்களை பரிசீலனை செய்கையில், இவ்வழக்கில் பிரதிவாதிகளின் முன்னோரான சேக் அப்துல் நபி என்பவர் 1, 2 வாதிகளின் தகப்பனார் வீரமலைக்கு எதிராக நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி வழக்கு தாக்கல் செய்துள்ளார் என்பதும் மேற்படி வழக்கில் பிரதிவாதி ஆஜராகாததால் வீரமலைக்கு எதிராக ஒருதலைப்பட்ச உத்தரவு ஏற்பட்டுள்ளது என்பதையும் அறிய முடிகிறது. மேற்படி வழக்கில் செலவுத்தொகையாக பிரதிவாதிக்கு ரூ.166/– வழங்க வேண்டுமென உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

9) வா.சா.ஆ.7–நிறைவேற்று மனு எண்.119/1989ல் வீரமலைக்கு எதிராக நிறைவேற்று மனு ஏற்பட்டதற்கான சான்றிட்ட நகல். மேற்படி ஆவணத்தை பரிசீலனை செய்கையில், இவ்வழக்கில் கண்ட தாவா சொத்துக்கள் அனைத்தும் குளித்தலை மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தின் மூலம் 03.03.1988ல் பற்றுகை செய்யப்பட்டுள்ளது என்பதை அறிய முடிகிறது.

10) வா.சா.ஆ.8–தாவா சொத்திற்குரிய வில்லங்க சான்றிதழ். மேற்படி ஆவணத்தை பரிசீலனை செய்கையில், மேற்படி பற்றுகை உத்தரவானது தரகம்பட்டி சார்பதிவாளர் அலுவலகத்தில் பதிவேற்றம் செய்யப்பட்டுள்ளது என்பதை அறிய முடிகிறது. மேற்படி வில்லங்க சான்றிதழ் பதிவு 5ல் தாவா சொத்துக்கள் குறித்து பற்றுகை ஏற்பட்டுள்ள விபரமானது பதிவேற்றம் செய்யப்பட்டுள்ளது என்பதை காட்டுகிறது. மேற்படி பற்றுகை உத்தரவானது 1989ம் வருடம் பதிவேற்றம் செய்யப்பட்டுள்ளது.

11) வாதிகள் தரப்பில் மேற்படி பற்றுகை உத்தரவிற்கு பின்னிட்டு பிரதிவாதிகள் அதன் மீது எவ்வித மேல் நடவடிக்கையும் எடுக்கவில்லை என்றும் எனவே அது காலாவதியாகி விட்டது என்றும் வாதிட்டனர். சட்டப்படி பற்றுகை உத்தரவு ஏற்பட்ட பின்னிட்டு பிரதிவாதிகள் மேற்படி சொத்துக்களை நீதிமன்ற ஏலத்தில் கொண்டு வர நடவடிக்கை எடுத்திருக்க வேண்டும். அவ்வாறு எந்த ஒரு நடவடிக்கையும் தற்போது வரை எடுக்கப்பட்டதாக பிரதிவாதிகள் தரப்பில் கூறப்படவில்லை.

12) மேலும் இவ்வழக்கில் நீதிமன்ற அழைப்பாணையை பெற்றுக்கொண்ட பின்னிட்டும் தங்கள் தரப்பில் உள்ள ஆவணங்கள் மற்றும் சாட்சியங்களை தாக்கல் செய்ய பிரதிவாதிகள் முன் வராததால் வாதிகள் தரப்பில் வாதிட்டது போல தாவா சொத்துக்கள் மீது தற்போது வரை பிரதிவாதிகள் சட்ட நடவடிக்கை எதுவும் எடுக்கவில்லை என்பதை அறிய முடிகிறது.

13) மேலும் தாவா சொத்துக்கள் வாதிகள் சுவாதீனத்தில் இருந்து வருகிறது என வாதிகள் தரப்பில் வாதிட்டனர். நீதிமன்ற பற்றுகை உத்தரவானது சார்பதிவாளர் அலுவலக பதிவேட்டில் பதிவு செய்யப்பட்டுள்ள நிலையில் மேற்படி சொத்துக்கள் குறித்து வாதிகள் எந்த விதமான ஆவணங்களையும் பதிவு செய்ய இயலவில்லை என வாதிகள் தரப்பில் வாதிட்டது ஏற்கத்தக்கதாகவே உள்ளது. எனவே வாதிகள் தரப்பு வாதம் உண்மையானது என இந்நீதிமன்றம் முடிவு செய்து அவர்கள் கோரியுள்ள பரிகாரத்தை பெற அவர்களுக்கு உரிமை உள்ளது என இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது.

**முடிவாக**

இவ்வழக்கு அனுமதிக்கப்பட்டு தரகம்பட்டி சார்பதிவாளர் அலுவலக பதிவேட்டில் பதிவு செய்துள்ள பதிவு எண்.01/1989 காலாவதியாகி விட்டது என விளம்புகை செய்து மேற்படி பதிவை 2 மாத காலத்திற்குள் நீக்கம் செய்து கொடுக்க வேண்டுமென பிரதிவாதிகளுக்கு எதிராக உத்தரவு பிறப்பித்தும், செலவுத்தொகையுடன் தீர்ப்பளிக்கப்படுகிறது.

இத்தீர்ப்புரையானது என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு, அவரால் குறிப்பெடுக்கப்பட்டு, கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு என்னால் படித்து சரிபார்க்கப்பட்டு, பிழை நீக்கம் செய்யப்பட்டு இன்று 2026ம் ஆண்டு மார்ச் திங்கள் 26ம் நாள் திறந்த நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

R TAMILARASI

Digitally signed by R TAMILARASI
Date: 2026.03.26 16:31:22 +0530

**முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி,**
**குளித்தலை.**

**வாதிகள் தரப்பு சாட்சி**

வா.சா.1 ராமசாமி (1ம் வாதி)

**வாதிகள் தரப்பு சான்றாவணங்கள்**

| வரிசை எண். | தேதி | ஆவணங்கள் விபரம் | குறிப்புகள் |
|---|---|---|---|
| வா.சா.ஆ.1 | 18.10.2010 | வீரமலை இறப்பு சான்றிதழ் | உண்மை நகல் |
| வா.சா.ஆ.2 | 24.01.2011 | வீரமலை வாரிசு சான்றிதழ் | நகல் |
| வா.சா.ஆ.3 | 27.09.2025 | சங்கப்பிள்ளை இறப்பு சான்றிதழ் | கணினி நகல் |
| வா.சா.ஆ.4 | 06.08.2024 | சங்கப்பிள்ளை வாரிசு சான்றிதழ் | கணினி நகல் |
| வா.சா.ஆ.5 | – | அ.வ.எண்.447/1987 வழக்கின் வாதுரை | சான்றிட்ட நகல் |
| வா.சா.ஆ.6 | – | அ.வ.எண்.447/1987 வழக்கின் தீர்ப்பாணை | சான்றிட்ட நகல் |
| வா.சா.ஆ.7 | – | நி.ம.எண்.119/1989 in அ.வ.எண்.447/1987 உத்தரவு | சான்றிட்ட நகல் |

| | | | |
|---|---|---|---|
| வா.சா.ஆ.8 | 05.12.2025 | 01.01.1987 முதல் 04.12.2025 வரையிலான வில்லங்க சான்றிதழ் | கணினி நகல் |

**பிரதிவாதிகள் தரப்பு சாட்சி – இல்லை**
**பிரதிவாதிகள் தரப்பு சான்றாவணங்கள் – இல்லை**

R TAMILARASI

Digitally signed by R TAMILARASI
Date: 2026.03.26 16:31:16 +0530

**முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி,**
**குளித்தலை.**

******************************

**PDM COURT, KULITHALAI**

**FAIR JUDGMENT**

**O.S.No.25/2026**

**D.D.26.03.2026**

**EXPARTE**

************************************